பக்கங்கள்: ஆறு

# உதயன்

விலை ரூபா 5-00

[illegible] 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 30 வெள்ளிக்கிழமை (14-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 260

# புலிகள் மீதான தடை அமுலை ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவு

## சட்ட ரீதியாக இந்தியாவுக்கு உரிமையில்லை என்று மனு

புதுடில்லி, ஆகஸ்ட் 14

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து இந்திய அரசு வெளியிட்ட பிரகடனத்தை அமுல் செய்வதை ஒத்திவைக்குமாறு புதுடில்லி விசேட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமக்கு எதிராகத் தடை விதிப்பதற்கு இந்திய அரசுக்கு சட்ட ரீதியாக உரிமை இல்லை என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்டு, விசேட நீதிமன்ற நீதிபதி பி. என். நாஹ் இந்த இடைநிறுத்த உத்தரவை நேற்றுமுன்தினம் வழங்கினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் பிரகடனத்தை இந்திய அரசாங்கம் கடந்தமே மாதம் 14 ஆம் திகதி வெளியிட்டது.

சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் மீதான தடை பிரகடனப் படுத்தப்பட்டதால்—

தடை செல்லுபடியாகுமா என்பதை விசாரித்து அரசுக்கு அறிவிப்பதற்கு ஒரு மாத காலத்திற்கிடையில் தனிநபர் விசாரணை நீதிமன்று நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் விசாரணை நீதிமன்று தாமதமாக நியமிக்கப்பட்டு, விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏன் தடைசெய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொப்பேகடுவவின் இடத்துக்கு ஜெரி டீ சில்வா

### ரொஹான் யாழ். மாவட்டத் தளபதி

கண்ணி வெடியில் கொல்லப்பட்ட வடபகுதி இராணுவத் தளபதி லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இடத்துக்கு மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வாவும்—

யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் விஜய விமலரத்தினாவின் இடத்துக்கு பிரிகேடியர் ரொஹான் தலுவத்தையும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வா இதுவரை கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாக கடமை ஆற்றி வந்தார்.

வக்கி அல்கம மேஜர் ஜெனரல் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு கிழக்குப் பிராந்திய தளபதியாக நியமிக்கப்பட உள்ளார்.

அதேசமயம் வடபகுதி கடற்படைத் தளபதி கொமடோர் மொஹான் ஜயமஹாவின் இடத்துக்கு எதிர்வரும் செப்டம்பர் முதல் கப்டன் டி. கே. தஸநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அதுவரை கொமடோர் சிசில் திசேரா வடபகுதி கடற்படைத் தளபதியாக தற்காலிகமாக கடமையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

### கொப்பேகடுவ தயாரித்த

## யாழ். குடா மீதான தாக்குதல் திட்டத்தில் மாற்றங்கள்

கொழும்பு, ஆக. 14

டென்ஸில் கொப்பேகடுவவும், விஜய விமலரத்னாவும் முன்னர் தயாரித்திருந்த யாழ். குடா மீதான தாக்குதல் திட்டத்தில் தற்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" இச்செய்தியை வெளியிட்டது.

தற்போது மாற்றத்துக்குள்ளாகியிருக்கும் இத்தாக்குதல் திட்டத்தை வடபகுதி இராணுவத் தளபதி என்ற முறையில் கொப்பேகடுவவும் யாழ். மாவட்டத் தளபதி என்ற வகையில் விஜய விமலரத்தினாவும் தயாரித்து இருந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று முன்தினம் கனத்தையில் அசம்பாவிதம்:

## அமைச்சர்கள் ரணில்; கூரே மயிரிழையில் தப்பினர்!

### கொழும்பு மேயர் காயம்; வாகனங்கள் எரிப்பு

கொழும்பு, ஆக. 14

நேற்று முன்தினம் பொரளை கனத்தை மயானத்தில் மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னவின் இறுதிக் கிரியைகளில் அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்கவும், சிறிசேன கூரேயும் கலந்து கொண்டனர்.

இறுதிக் கிரியைகள் முடிவுற்றதும் அமைச்சர்களை நோக்கி மக்கள் கற்களை வீசினர் என்றும் பெரும் கூச்சல் எழுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அமைச்சர்கள் காயங்கள் ஏதுமின்றி பாதுகாப்புடன் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தின் போது பல பொலீஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டன. குறைந்த பட்சம் ஒரு தனியார் பஸ்வண்டியும் தீக்கிரையாக்கப்பட்டது.

கொழும்பு மேஜர் ரத்னசிறி ராஜபக்ஷவும், சில மாநகர சபை உறுப்பினர்களும் கல் வீச்சில் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ-10]

## மக்கள் கோபாவேசத்துக்கு அரசு தான் காரணம்!

### எதிரணி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 14

கொப்பேகடுவவின் மரணச் சடங்குகள் நடத்தப்பட்ட விதம் குறித்து மக்கள் கோபாவேசமுற்றிருப்பதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பீ. மகிந்த ராஜபக்ஷ பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

குண்டு வெடித்து 4 மணித்தியாலங்களின் பின்னரே கொப்பேகடுவ மரணமடைந்துள்ளார். ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு முதலில் கொண்டு வரப்பட்ட அவர் பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

காயமுறும் இராணுவத்தினருக்கு உடன் சிகிச்சை அளிக்கும் வகையில் அனுராதபுரம் மருத்துவமனை சீர்திருத்தப்படாதது ஏன்? என மக்கள் கேட்கின்றனர். இப்படி ராஜபக்ஷ கூறினார்.

பாடகர் எச். ஆர். ஜோதிபால, சாகரிக்கா கோமஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. மயிலந்தனையில்

## 9 தமிழரின் சடலங்கள் நேற்று கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 14

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையோரக் கிராமமான மயிலந்தனையில் காட்டுப்பகுதி ஒன்றிலிருந்து நேற்று ஒன்பது தமிழர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று புனாணைப் பகுதியில் படையினர் தமிழர்கள் மீது மேற்கொண்ட வன்முறைச் சம்பவங்களின் போது இராணுவத்திடம் சிக்கிய தமிழர்களின் சடலங்களே அவை என நம்பப்படுகிறது.

புனாணையில் நடந்த வன்முறை சம்பவங்களில் 50க்கும் அதிகமான தமிழர்கள் பலியாகினர் என்று ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது

[6 ஆம் பக்கம் பார்க்க]

### புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து

## இறப்பமடு முகாமை படையினர் கைவிட்டனர்

யாழ்ப்பாணம், ஆக.14

வவுனியா இறப்பமடுவில் அமைந்திருந்த ஸ்ரீ லங்காப் படை முகாமை இராணுவத்தினர் கைவிட்டுச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை அடுத்தே அந்த முகாமைப் படையினர் கைவிட்டுச் சென்று மாகாகச்சைக்கொடி என்னும் இடத்தில் புதிதாக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இறப்பமடு முகாமை இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர் கருணாநிதிக்கு எதிராக விசாரணை கமிஷன்

### தமிழக அரசு நியமனம்

சென்னை, ஆக. 14

முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியும் அவரது குடும்பத்தினரும் மற்றும் ஒரு சில அரச (ஐ. ஏ. எஸ்) அதிகாரிகளும் நடத்தியதாகக் கூறப்படும் ஊழல் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த விசாரணைக் கமிஷன் ஒன்றை தமிழக அரசு நியமித்து உள்ளது.

இக் கமிஷனின் தலைவராக சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதி திரு. எஸ். சிவசுப்பிர[illegible] நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆறு மாதங்களினுள் கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

விசாரணைக் கமிஷன் அமைக்கும் முடிவு நேற்று முதலமைச்சர் செல்வி ஜெய[illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தரையின் உறைதான் தரம் மிகுந்த தாவரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களுடன் இன்று 'குமண' திருமலை புறப்பாடு

யாழ்ப்பாணம், ஆக 14

திருகோணமலையில் இருந்து இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமண" கப்பல் 46 நோயாளர்கள், அவர்களது உறவினர்களுடன் இன்று மாலையே திருமலை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும்.

இன்று அங்கிருந்தும் கப்பலில் நோயாளர்கள் இங்கு வருவர்.

இதேவேளை—

நாளை மறுதினம் (ஞாயிற்றுக்கிழமை) காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் "குமண" கப்பல் மீண்டும் அன்று மாலையே நோயாளர்கள் மற்றும் அரச ஊழியர்களுடன் திருமலை நோக்கிச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நாளை

யாழ்ப்பாணம், ஆக. 14

ஜனசக்தி சனசமூக நிலைய அறவழி பாலர் பாடசாலைப் பாலர்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி நாளை சனி பிற்பகல் 2 மணிக்கு மயிலணி வடக்கில் நடைபெறும்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-5)

## நாடகப் பயிற்சி பட்டறை

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவினர் வடமராட்சியில் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளனர்.

நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும், புதிய கலைஞர்களைத் தோற்றுவிக்கும் முகமாகவும் நடத்தப்படவுள்ள மேற்படி நாடகப் பயிற்சிப் பட்டறையில் நாடகத்துறையில் ஆர்வம் கொண்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம், என்றும்—

பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள விரும்புவோர் வதிரியிலுள்ள கலை, பண்பாட்டுக் கழக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## அராலித்துறை கண்ணியின் பின் வெளியான செய்திகள்

# கொப்பேயின் 'நிழல்' நண்பரும் பலி

கொழும்பு, ஆக. 14

அராலித்துறைக் கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட லெப்டினன்ட் கேர்ணல் நளின் சேனாதிரத்ன, லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவின் 'நிழல்' என அழைக்கப்பட்டு வந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொப்பேகடுவவின் நம்பிக்கைக்குரிய படையினரில் ஒருவர் நளின் என்றும் தாம் உயிரோடு இருக்கும் வரை கொப்பேகடுவவை சாகவிடமாட்டேன் என்று நளின் கூறி வந்தார் என்றும் கூறப்படுகிறது.

அவரின் விருப்பம் போலவே, கொழும்பு ஆஸ்பத்திரியில் கொப்பேகடுவ இறப்பதற்கு முன்னரே நளின் அராலித்துறையில் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலேயே இறந்துவிட்டார்.

வடபகுதித் தளபதியாக கொப்பேகடுவ பதவி ஏற்ற நாள் முதல் நளின் அவரது உதவியாளராகப் பணியாற்றி வந்தார். (ஓ-எ)

## சம்பவம் நடந்த இடத்துக்கு 2 வாரங்களுக்கு முன்னர் அமரதுங்கா சென்றிருந்தார்

கொழும்பு, ஆக. 14

கொப்பேகடுவ உட்பட படை உயர் அதிகாரிகள் கொல்லப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்பு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா அராலித்துறையில் கண்ணிவெடித் தாக்குதல் நடந்த அந்த இடத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

இத்தகவலை ஜனாதிபதி பிரேமதாஸாவே தம்புள்ளவில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் சொன்னதாவது;

அராலித்துறையில் கண்ணி வெடித் தாக்குதலுக்குள்ளான வாகனத்தில் மேலும் இரண்டு படையினர் ஏறிக்கொள்ள முயற்சித்தனர்; இடவசதியின்மையால் அவர்களால் அந்த வாகனத்தில் பயணம் செய்ய முடியவில்லை;

கடந்த, 3 அல்லது 4 மாதங்களில் ஊர்காவற்றுறைக்கு பல அமைச்சர்கள் சென்று திரும்பினர் — இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

## ராணுவ முத்திரை பொறிக்கப்பட்ட

# மக்களைத் தூண்டும் பிரசுரங்கள் மீட்பு!

கொழும்பு, ஆக. 14

அராலித்துறையில் அமுக்கக் கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த பத்து பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் மரணம் குறித்து மக்களைத் தூண்டும் விதத்தில் எழுதப்பட்ட இராணுவ முத்திரை பொறித்த துண்டுப் பிரசுரங்களின் தொகுதி ஒன்றை கொழும்பில் பல்கலைக்கழக வளவில் இருந்து பொலீஸார் கண்டெடுத்தனர்.

துண்டுப் பிரசுரத்தின் பின்னணியில் உள்ளோர் யார் என்பதை அறிய பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்று கொழும்புப் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

# பொலீஸ் வாகனங்கள் தாக்கப்பட்டு நாசம்

கடந்த திங்கட்கிழமை கனத்தையில் லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் மரணச்சடங்கின் போது இடம்பெற்ற குழப்பங்களின்போது பொலீஸ் வாகனங்கள் பல நாசமாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் பஸ் ஒன்றும், கனரக 'டிரக்கு'கள் இரண்டும், மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள், இரு ஸ்கூட்டர்கள் ஆகியன மிக மோசமாகச் சேதமாக்கப்பட்டன என்று பொலீஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் பொலீஸ் அதிபர் (எஸ். பி.) ஒருவரும், ரிசர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் நால்வரும் காயமடைந்துள்ளனர் என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார். (த-எ-3)

## கனத்தை அசம்பாவிதம்; முதல்நாள் 15 பேர் காயம்

கொழும்பு, ஆக. 14

கொப்பேகடுவவின் இறுதிக் கிரியை நடந்த கனத்தைப் பகுதியில் இடம்பெற்ற முதல் நாள் கலவரத்தின்போது மயானத்தின் சுற்றுப்புறச் சுவரின் ஒரு பகுதி சனநெரிசல் காரணமாக இடிந்து விழுந்தது.

அதில் குறைந்தது பதினைந்து பேர் காயமடைந்தனர். (ஓ-எ)

## கொப்பேகடுவ நினைவாக வவுனியாவில் வழிபாடு

### நிகழ்ச்சிக்குச் சென்ற சிப்பாய் பலி

வவுனியா, ஆக. 14

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் நினைவாக அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற பௌத்தமத வழிபாட்டில் கலந்து கொள்ள வாகனத்தில் சென்ற சிப்பாய் ஒருவர் வாகனம் தந்திக் கம்பத்துடன் மோதியதில் பலியானார்.

சிங்க படைப் பிரிவில் கடமையாற்றும் பி. எல். பெரேரா (31 வயது-கம்ஹா) என்பவரே பலியானவர் ஆவார்.

கொப்பேகடுவவின் மறைவையொட்டி வவுனியாவிலும்

[6 ஆம் பக்கம் பார்க்க]


Personal

NEW SCIENCE CENTRE

Elilakam Front Lane, Jaffna.

93 A/L

One Year Revision Classes

ஆரம்பம்:- 15 - 08 - 92 சனி 7-00 a.m

PHY:- திரு. ரவீந்திரநாதன் B.Sc (Cey) Dip in Ed.
CHE:- திரு. செல்வா B.Sc (Hons)
ZOO:- திரு. ஈஸ்வரதாசன் (B.Sc (Cey)
BOT:- திரு. பாலசுப்பிரமணியம்
Pure / App:- திரு. குணசிங்கம் B.Sc (Cey)

★ 92 A/L பரீட்சையில் தோன்றாத, தோன்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வகுப்பு ஆரம்பிக்கப்படுகிறது.

★ ஒவ்வொரு பாடத்திலும் ஒவ்வொரு அலகு ரீதியாக மீட்டலும் அவற்றுக்கு வினா - விடை முழுப் பாடத்திட்டமும் செய்து முடிக்கப்படும்.

(இ-3049)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, தலைமையகம்

விசேட பொதுக் கூட்டத்துக்கான அறிவித்தல்

யாழ். கிளையின் மேற்படி விசேட பொதுக் கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 13 - 09 - 92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி யுபுளி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளை செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கான நியமனங்கள் 02-09-92 முதல் 04-09-92 பிற்பகல் 4.00 மணி வரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான படிவங்களை எமது பணிமனையில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

நியமனப் பத்திரங்களை 06 - 09 - 92 பிற்பகல் 4.00 மணி வரை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலும் 30-08-92 ஆம் திகதி வருடாந்தப் பொதுக்கூட்டம் பின்னர் பத்திரிகையில் அறிவிக்கப்படும் இடங்களில் நடைபெறும். பிரிவுகளின் நியமனம் 19-08-92 முதல் 21-08-92 பிற்பகல் 4.00 மணி வரை அவ்வப் பிரிவுகளின் பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும். பிரிவுகளின் நியமனம் வாபஸ் 23-08-92 பிற்பகல் 4.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பிரிவிற்கான நியமனப் பத்திரங்களை ரூபா 10/- செலுத்தி அவ்வப் பிரிவு பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு பிரிவிலும் 30-08-92 இல் நடைபெறும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் பிரிவு செயற்குழு உறுப்பினர் பட்டியலும், ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 30 கிளைக் குழு பிரதிநிதிகளின் முழுப் பெயர், அங்கத்துவ அட்டை இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவு செய்யப்படும் புதிய தலைவரின் சிபார்சுடன் புதிய பிரிவு செயலாளர் யாழ். கிளை இடைக்காலத் தலைவருக்கு 01-09-92 பிற்பகல் 4.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

முக்கிய குறிப்பு:

மேற்படி யாழ். கிளை, பிரிவுகளின் தேர்தல் சம்பந்தமான விடயங்கள் பற்றி விளக்கம் கொடுப்பதற்காக யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவின் தற்போதைய தலைவர், செயலாளர், உபதலைவர், பொருளாளர் அனைவரையும் தவறாது எமது பணிமனையில் எதிர்வரும் 15-08-92 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13-08-92.

ஏ. இ. செபநாயகம்
தலைவர்
(இடைக்கால நிர்வாகம்)

(C / 3052)



NEW SCIENCE HALL

Kannathiddy Road, JAFFNA.

93/AL

★ PHYSICS ★

★ அலகு ரீதியான மீட்டல்

ஒளியியல்

திரு. கணேசன் Bsc(Eng)

ஆரம்பம்: 15-08-92

Sat—Sun: 2.15—3.15

(இ/3139)



புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

A/L 93, 94

அளவையியல்

சோதிலிங்கம்.

பகுதி II

ஆரம்பம்: 15-08-92

(7.00—9.00)

(இ/3140)



A/L 93

Paper Class

12 — 01 விலங்கியல்
01 — 02 இரசாயனவியல்
02 — 03 பௌதிகவியல்
03 — 04 தாவரவியல்

ஆரம்பம்:

16 - 08 - 1992

(ஞாயிறு நண்பகல் 12-00 மணி)

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்.

NEW MASTER INSTITUTE,

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமா தலைமையில் எதிர்க்கட்சிக் கூட்டம்:

# போரை உடன் நிறுத்த சகல கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்

## சமசமாஜக்கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஆக. 14

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் ஏற்படக்கூடிய அபாயகரமான விளைவுகளை மனதில் கொண்டு அதனை உடனடியாக நிறுத்த சகல கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நவசமசமாஜக் கட்சிப் பிரதிநிதிகள் இவ்வாறு வலியுறுத்தினர்.

சுதந்திரக்கட்சி சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நவசமசமாஜக் கட்சி பிரதிநிதிகளால் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் சில முக்கிய அம்சங்களாவன;

யாழ்ப்பாணம் மீது எந்த நேரத்திலும் இராணுவ ரீதியான பாரியதொரு தாக்குதலை நடத்த அரசாங்கம் எண்ணியுள்ளதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கில் அப்பாவிக் குடிமக்களது உயிர்கள் மிகக் குறுகிய காலத்தில் பாதிக்கப்படக்கூடிய பேரபாயம் தோன்றியுள்ளது.

அத்துடன் அத்தியாவசிய பொருள்கள் விநியோகம் சீராக இல்லாமையால், பறிக்கப்பட்டிருக்கும் மக்களது அன்றாட வாழ்க்கை ஒழுஅளவில் பாதிப்புக்குள்ளாகும். இராணுவத்திற்கும் அநியாயமான உயிரிழப்புகள், சேதங்கள் ஏற்படும். எனவே இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டும்.

யுத்தத்தைத் தொடர்வதனால் பாதுகாப்பு செலவினங்கள் மிகப் பெருமளவில் அதிகரித்து வருகின்றன. இச் செலவீனங்களில் பழு நாட்டின் மக்கள் மீதே சுமத்தப்படும். இன்று வாழ்க்கைச் செலவு உயர்ச்சியினால் கடும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் நாட்டு மக்கள் பட்டினி கிடக்கவே நேரிடும்.

(ஒ-த)

## "ரெலோ" உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஆக. 14

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் இருந்து காளி கோவிலடிக்குச் சென்ற "ரெலோ" இயக்க உறுப்பினரான பூபாலபிள்ளை நாகலிங்கம் என்பவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிய வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் பட்டிருப்பைச் சேர்ந்தவர் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

[த-3]

## அமைச்சர் தயாரத்னா வவுனியா விஜயம்

கொழும்பு, ஆக. 14

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்னா இம்மாதம் 25ஆம் திகதி வவுனியாவுக்குச் செல்கின்றார்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்துக்கு வசதியாக ஏனைய திணைக்களங்களின் குறைபாடுகளை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே அமைச்சர் வவுனியா செல்லவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

[த-எ]

## வெளியேற்றம்!

வன்னிப் பிரதேசத்திலுள்ள பிரப்பமடு கிராமத்தில் வசித்து வந்த சிங்களக் குடியேற்றவாசிகளான சுமார் 60 குடும்பங்கள் அக் கிராமத்தை விட்டு வெளியேறி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 15 படையினர் உயிரிழந்ததை அடுத்து இக் குடும்பங்கள் பயந்து கிராமத்தை விட்டு வெளியேறியதாகவும் —

அயலிலுள்ள பெரிய கஞ்சிக்குடி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமிலும், உறவினர்கள் வீடுகளிலும் அவர்கள் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[த-10]

பத்மநாபா கொலை வழக்கு:

## குற்றஞ்சாட்டப்பட்டோரில் 17 பேர் இலங்கையர்கள்

சென்னை, ஆக. 14

ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா உட்பட 14 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 26 பேரில் 17 பேர் இலங்கையர்கள் என்றும் — ஒன்பது பேர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 26 பேரில ஒற்றைக்கண் சிவராசன் தற்கொலை செய்து கொண்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் உட்பட 6 பேர் தலைமறைவாக உள்ளனர்.

திருமதி சுப்புலட்சுமி ஜெகதீஸன் உட்பட 16 பேர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்:

முன்னாள் மாநில உள்துறைச் செயலாளர் நாகராஜன், வழக்கறிஞர்கள் வீரசேகரன் மற்றும் மருதநாயகம் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு சிறப்பு புலனாய்வுப்பிரிவு இன்ஸ்பெக்டர் ஜெனரல் பி.கி. பந்த் செய்தியாளர்களிடம் இது பற்றித் தெரிவித்ததாவது;

இவ் வழக்குத் தொடர்பாக 300க்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரணை செய்யப்படுவார்கள். விசாரணைக்கான இடமும், திகதியும் விசேட நீதிவானால் பின்னர் முடிவு செய்யப்படும்.

இவ்வாறு திரு. பந்த் கூறினார்.

[த-எ]

## தெரிவுக்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஆக. 14

நாடாளுமன்றக் கட்டடத்தில் கடந்த செவ்வாய் நடைபெறவிருந்த தெரிவுக்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இதற்கான அறிவித்தல் தந்தி மூலம் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

தெரிவுக்குழு எதிர்வரும் 24 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

இதேவேளை —

தமிழ்க் கட்சிகள் நாளை சனிக்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(த-3)

## 45 பேருக்கு நியமனம்

மன்னார் மாவட்ட அரசு நிறுவனங்களில் உள்ள எழுதுவினைஞர் வெற்றிடங்களை அமைய அடிப்படையில் நிரப்புவதற்காக கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி மன்னாரில் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த 101 பேரில் 45 பேருக்கு கடந்த முதலாம் திகதி முதல் நியமனங்கள் வழங்கப்பட்டன,

[இ-எ]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 – 04 – 1930



உதிர்வு: 15 – 07 – 1992

## அமரர் தம்பு கோபாலசிங்கம் J. P.

(முன்னாள் பங்காளர்: 'ராஜ்கோபால்ஸ்', 'கிறவுண்ஸ்' - யாழ்ப்பாணம்.)

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய், எல்லோர்க்கும் ஆதரவாய்,
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே! தங்களின் சிரித்த முகமும்,
இனிய பேச்சும், எம் இதயங்களை விட்டு ஒருபோதும் அகலாது;
தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், சகோதரர், மைத்துனர், மைத்துனியர்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

● அன்னாரின் மறைவையொட்டி, நேரில் சமுகமளித்து அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், உதவிகள் புரிந்த உறவினருக்கும், ஊழியர்களுக்கும், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

41, சங்கிலியன் வீதி, நல்லூர்.

### ஊழியர்களின் இரங்கலுரை

எங்கள் உள்ளங்களின் உறைவிடமாகிய பெருந்தகையே!
எங்களையும், எங்கள் குடும்பங்களையும் வாழவைத்த பெருங்கடலே!
வணிகத்தின் வரைவிலக்கணமாய்த் திகழ்ந்தவரே!
தங்களின் மாயமான மறைவை நினைத்து மனம் நெகிழ்கின்றோம்
பன்னெடும் காலம் பழகிய எங்கள் நெஞ்சம் எரிகின்றதே,
தொழிலில் ஆசானாய், ஈதலில் வள்ளலாய், துன்பத்தில் அன்பனாய்;
இன்பத்தில் தோழனாய், இன்முகம் காட்டி எம்மைக் கவர்ந்தவரே!
எப்போ தான் தங்கள் திருமுகத்தை இனிக் காண்போம்
எப்போ தான் தங்கள் அறிவுரையைக் கேட்போம்,
எப்படித் தான் தங்கள் இன்மொழியை மறப்போம்;
கல்நெஞ்சமுடைய காலன் எங்களைக் கலங்க வைத்துவிட்டானே!
அவன் காலம் தாழ்த்திச் செயல்பட மறந்து விட்டானே,
தங்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு,

அன்னாரின் மறைவையொட்டி, ஆழ்ந்த கவலையில் துயருறும் அவரது குடும்பத்தினர் ஆறுதலடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவையொட்டி, அனுதாபம் தெரிவித்தோருக்கும், நண்பர்களுக்கும், ஆதரவாளருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்;

"ராஜ்கோபால்ஸ்", "கிறவுண்ஸ்" ஊழியர்கள்,
யாழ்ப்பாணம்.

[22142]


அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
Sep.இல் நடைபெறவுள்ள

எழுதுவினைஞர் சேவை
போட்டிப் பரீட்சைக்குரிய

விசேட பயிற்சி வகுப்புகள்

2ஆவது பிரிவு
ஆரம்பம்: 15 - 08 - 1992
பி.ப. 2 மணி

பாடநெறி:
(1) மொழிப் பயிற்சி (11) தகுதித்தேர்வு

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD,
JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி 3034]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவதுவீடு] [22121]

## புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5237]

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப்பரிசில் அடுத்த பரீட்சை 15-08-92 சனி மு.ப. 8 - 00, மு.ப 10 - 30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [22145]

காரைநகர், ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். வாரிவளவு, நல்வியக்க சபை. [5251]

## A/L மாணவர்களுக்கு

இந்து நாகரிகம் இதழ் - 6 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: க. சி. குலரத்தினம், பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். [சி/3138]

## வெற்றுப் பைக்கற்று

பாமோ வெற்றுப் பைக்கற்றுகள் தொகையாகவும், சில்லறையாகவும் தேவைப்படுகின்றன. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்! அண்ணா தொழிலகம். இணுவில். [சி-3127]

## தவறிவிட்டது

23-7-92 இல் ஆலங்கேணிக்கும், முறிகண்டிக்கும் இடையில் 291510779V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். தி. இரத்தினசபாபதி, கொட்டியாவளை, பத்தைமேனி, அச்சுவேலி. [22154]

## இலவச திருமண சேவை

35 வயது, ரேவதி, செவ்வாய் 8, கிரகபாவம் 33, ஆயுர்வேத வைத்தியருக்கு அதே தொழில் மணமகள் தேவை. சகல துறைகளில் மணமக்கள் உண்டு. ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [22135]

## மட்டு. ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது

கொழும்பு, ஆக. 14

கடந்த சில தினங்களாக ஸ்தம்பித்திருந்த மட்டக்களப்பு—கொழும்பு ரயில் மற்றும் பஸ்சேவைகள் கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## அரசாங்க அறிவித்தல்
### சுகாதார சேவைகள் திணைக்களம்
### யாழ்ப்பாணம்
# கேள்விப் பத்திரம் கோரல்

இலக்கம் 57, விக்டோரியா வீதியில், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 14 அடி நீள, அகலமும் 8 அடி உயரமும் கொண்ட கொட்டகை ஒன்று அஸ்பெஸ்ரஸ் சீட் கூரையுடன் அமைப்பதற்கு இப் பணிமனையில் பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 28 - 08 - 1992 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் விவரங்களுக்கு மேற் காணும் முகவரியில் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் கொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,

07 - 08 - 1992. [சி-3048]

# வடமராட்சி கல்வி நிலையம்

V. E. C. [யங்றோயல்ஸ்]

விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி.

**A/L 93** துரித மீட்டல் வினா - விடை வகுப்புக்கள்

**ஆரம்பம்: 20-08-1992**

**பௌதிகம்: திரு. சோதிலிங்கம்**
வியாழன் 5 — 6 p. m.

**தூய, பிரயோக கணிதம்: திரு. அருளானந்தம்**
வியாழன் - 3—5 p. m.

**இரசாயனம்: திரு. சண்**
வியாழன் 2 — 3 p. m.

**தாவரவியல்: திரு. குணசீலன்**
வியாழன் 3 — 4 p m.

முக்கிய குறிப்பு:
வடமராட்சியில் எமது நிறுவனத்தில் மட்டும் வகுப்புக்கள் நடைபெறும் என்பதை A/L மாணவருக்கு அறியத்தருகின்றோம்.

[22158] — நிர்வாகம்.

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 93, 94 கலை, வர்த்தகம்

**பொருளியல் - திரு. கலாகரன்**

93 பிரிவு I பணம் வங்கி, சென்மதி நிலுவை, தேசிய வருமானம்

**பிரிவு II வினா-விடை**

94 பிரிவு I கேள்விக் கோட்பாடு, தேசிய வருமானம்

**வர்த்தகம் - திரு. தேவா**

93 பிரிவு I பொதுக் கூட்டுத்தாபனம், தொழில் நிறுவனங்கள்

94 பிரிவு II தொழில் நிறுவனங்கள்
பிரிவு I தொழில் நிறுவனங்கள்

**கணக்கியல் - திரு. வன்னியசிங்கம்**

93 பிரிவு I மாற்றுண்டியல் க/கு, ஒப்படைக் க/கு
பிரிவு II ஒப்படைக் க/கு


94 பிரிவு I முடிவுக் க/குக்கு செம்மையாக்கலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று.

[சி 3135]

# நினைவஞ்சலி

## 8ஆம் ஆண்டு — 2ஆம் ஆண்டு





**வ. சின்னப்பிள்ளை**
மலர்வு: 1931—03—09
உதிர்வு: 1984—12—13

**வ. வரததாசன்**
மலர்வு: 1959—12—14
உதிர்வு: 1990—08—07

வரதன் என அன்பாக அழைக்கப்படும் வரததாசன் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருமணத்தின் பின் அரியாலையைத் தனது வசிப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரியிலுள்ள றிபேக் கல்லூரியின் பழைய மாணவனும், ஸ்ரான்லி வீதியிலுள்ள இரண்டாம் இலக்க இலங்கை வங்கிக் கிளையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை புரிந்தவரும் ஆவார்.


இவர் குட்டி வஸ்தியாம்பிள்ளையினதும் (சின்னத்துரை) காலஞ் சென்ற சின்னப்பிள்ளையினதும் ஏக புதல்வனும், நிர்மலாவின் அன்புக் கணவரும் ஆவார்.

இவரின் நினைவஞ்சலிக் கிரியையானது இன்று [14-08-1992] வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் விசேட அபிஷேகத்துடன் ஆரம்பித்து ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள 189ஆவது இலக்கத்தில் உள்ள திரு. கனகசபையின் இல்லத்தில் நடைபெறும். மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

– அன்புத் தந்தை கு. வஸ்தியாம்பிள்ளை.

189, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை. [22143]

# பாஷாண உத்வாஷணமும் சபிண்டீகரணக்கிரியை அழைப்பும்



**சிவஸ்ரீ வை. கணபதிப்பிள்ளை ஐயா**

31 - 07 - 1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 11-30 மணியளவில் சிவபதமடைந்த சிவஸ்ரீ வை. கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் பாஷாண உத்வாஷணமும், சபிண்டீகரணக் கிரியையும் 15 - 08 - 1992 சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கும், நண்பகல் 11 மணியளவில் சபிண்டீகரணமும் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு அனுப்ப இயலாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'அன்னபவனம்',
சன்னதி வீதி,
கதிரிப்பாய், அச்சுவேலி. [22155]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பக்குவப்படவில்லை

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் படைப் பிரதானிகளாக விளங்கிய— சூத்திரதாரிகளாக இருந்த— லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன ஆகிய இருவர்களினது இறுதிச் சடங்குகளின் போதும் கொழும்பில் பெரும் குழப்பங்கள் நடந்தன.

இந்தக் குழப்பங்கள், ஆர்ப்பாட்டங்களின் போது இனவாதப் போக்கைவிட, அரச எதிர்ப்புப் போக்கே மேலோங்கிக் காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1983 ஆம் ஆண்டில் சாதாரண சிப்பாய்கள் வடக்கில் உயிரிழந்தமைக்காகத் தெற்கில் தமிழர்களைப் பழிவாங்கிய சிங்களவர்கள், இம்முறை முற்றிலும் மாறுபட்ட போக்குடையவர்களாக இருந்தார்கள் என்று அவதானிகள் அறிவித்துள்ளார்கள். இம்முறை சிங்கள மக்களின் கோபம் அரசாங்கப் பக்கத்தின் மீதே வீழுந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களுடனான போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரத் தேவையான பலம் அரசாங்கத்திடம் இல்லை என்பதைச் சிங்கள மக்கள் உணர்கிறார்கள். அதுவே அரசு மீதான அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது என்று கூட ஒருவிமர்சகர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஆயினும், வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தத்தை நிறுத்த வேண்டும். இரு தரப்புகளின் வீண் உயிர் அழிவுகளையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் — என்ற கருத்து நிலைப்பாட்டுக்குச் சிங்கள மக்கள் வந்திருக்கிறார்களா என்றால் ...... இல்லை என்பதே பதில்!

அத்தகைய ஒரு கருத்து சிங்கள மக்கள் மத்தியில் மலர்ந்திருக்குமானால், அவர்கள் இரண்டு நாட்கள் உண்டாக்கிய குழப்பங்களின் போது, ஆர்ப்பாட்டங்களின் போது யுத்தத்தை நிறுத்துமாறு கோஷமிட்டிருப்பார்கள். யுத்த நிறுத்தம் செய்து அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு அரசை வற்புறுத்தி இருப்பார்கள்.

தமிழர்களை வெல்ல முடியவில்லையே, அவர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு — அம்புக்கு — தாங்கள் துட்ட கைமுனுக்களாக மனதில் ஏற்றிப் போற்றி வைத்திருந்த டென்சில் கொப்பேகடுவவும், ஏனைய உயர் நிலை அதிகாரிகளும் இரையாகி விட்டார்களே என்ற தோல்வியுணர்வும் அதன் வாயிலாகப் பிறந்த ஆத்திர உணர்ச்சியுமே கனத்தைக் குழப்பங்களில் பிரதிபலித்திருக்கின்றன.

இக்குழப்பங்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் தென்னிலங்கை அரசியல் போட்டியைக் காட்டுபவையே அன்றித் தமிழருக்கு விரோதமான மனப்போக்கு மடிந்து போனதற்கான அறிகுறிகள் அல்ல!

தமிழர்களை வெல்ல முடியாத அளவுக்கு தமது படைகள் மனப்பலவீனம் உடையன என்பதை சிங்கள மக்கள் இன்னும் உணரவில்லை என்பதே உண்மை நிலை.

தமிழர் பால் சிங்களவர்களுக்குக் கரிசனை பிறந்திருக்கிறது என்றோ, அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி, அடக்கு முறை எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்றோ சிந்திக்கும் அளவுக்குச் சிங்களவர்கள் இன்னும் அரசியல் பக்குவப்படவில்லை. தமிழர்களுக்கு எதிரான குரோதம் மனதில் உள்ளே கிளர்ந்து கொண்டிருந்தாலும் வெளியே அதனைக் காட்டிக் கொள்ளாமல் மேனி மினுக்குச் செய்திருக்கிறார்கள். அவ்வளவு தான்!

---

இராணுவ அதிகாரிகளின் மரணத்துக்கு

# முதலைக் கண்ணீர் வடிக்கும் அரசே வட-கிழக்கு யுத்தத்துக்குப் பொறுப்பு

### நவசமசமாஜக் கட்சி அறிக்கை

கொழும்பு, ஆக. 14

டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் படை அதிகாரிகள் உயிரிழந்ததற்கு முதலைக் கண்ணீர் வடிக்கும் ஆளும் உயர்நிலை வட்டாரத்தினர் தான் வடக்கில் இடம்பெற்று வரும் அறிவற்ற இனக்கொலை யுத்தத்துக்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.

நவசமசமாஜக்கட்சி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கொப்பேகடுவ மற்றும் படை அதிகாரிகளின் மரணம் நாட்டின் லட்சக்கணக்கான மக்களைச் சுற்றிவளைத்துள்ள துக்ககரமான நிலைவரத்தை வெளிப்பரப்புக்குக் கொண்டுவந்துள்ளது.

வடக்கில் இடம்பெறும் இனக்கொலை யுத்தம் காரணமாக சகல சமூகங்களையும் சேர்ந்த, பெரும்பாலும் தொழிலாளர்களும் விவசாயிகளுமாக, குறைந்தது 50 ஆயிரம் பேர் கடந்த பத்து ஆண்டுகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒன்றரைக் கோடி மக்கள்— பெரும்பாலும் தமிழர்கள்— சம்பந்தப்பட்ட இவ்வன்செயல், எவ்வளவு இரக்கமற்றதும் தன்னிச்சையானதுமானது என்பதை படை உயரதிகாரிகளின் மரணம் தெளிவாகக் காட்டுகிறது.

எப்படியாயினும்— எதிர்மறையான ஒரு விஷயம் என்ன என்றால், தமிழரின் புரட்சிக்கு முடிவுகாண அரசியல் தீர்வே தேவையானது; யுத்தமும் அடக்குமுறையும் அல்ல என்பதை டென்ஸில் கொப்பேகடுவ திரும்பத் திரும்ப கூறிவந்தார் என்பது தான்.

யுத்தத்தை வழிநடத்தும் உயர்தலைமைப் பொறுப்பில் இருந்தும் கூட, தமிழரின் புரட்சிக்கு பின்னணியாக இருப்பது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களே என்பதையும் சுட்டிக்காட்டும் துணிச்சல் கொப்பேகடுவவிடம் இருந்தது.

ஜனநாயகத்துக்காகவும், சமாதானத்துக்காகவும் குரல் கொடுப்பவர்கள் யுத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழவும்—

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய அடிப்படையில் சமாதானத்தைக் கொண்டு வருமாறு கோரவும் இது ஒரு வாய்ப்பாக அமையட்டும்—

நவசமசமாஜக்கட்சிப் பொதுச்செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்தினா கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

### எதிர்க்கட்சிகளே தடையாக இருக்கின்றன

கொழும்பு. ஆக. 14

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் தடையாக இருப்பதாக கொழும்புச் சிங்களப் பத்திரிகை ஒன்று ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது.

எதிர்க்கட்சியினரைப் பொறுத்தளவில் அவர்களுக்கு சந்தலம விவகாரம், குற்றப் பிரேரணை, இருவர் காணாமற் போதல், ஜனாதிபதி ஆட்சி முறை போன்ற விடயங்களையே எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் முன்னெடுத்துச் செல்வதாகவும் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி அவை மௌனம் சாதிப்பதாகவும் —

அத்தலையங்கத்தில் கூறப்பட்டிருந்தது. [த-10]

# திருகோணமலை நகரில் ராணுவம் தேடுதல் வேட்டை

திருகோணமலை, ஆக. 14

திருகோணமலை நகரின் பிரதான பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினர் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. சந்தேகத்தின் பேரில் பலர் மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நகர வீதிகளில் நின்ற அனைவரும் உட்துறைமுக வீதியில் உள்ள பொதுமண்டபம் ஒன்றிற்கு கூட்டிச் செல்லப்பட்டு முகமூடிகளின் துணையுடன் இனம் காணப்பட்டனர்.

இதே வேளை —

பாலையூற்று கிராமத்தில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற தேடுதல் வேட்டையின்போது கைதான 23 பேரும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களில் 4 பேர் பெண்கள்.

மேலும் அராலித் துறையில் பலியான இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக திருமலை பகுதிகளில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. [த]

### கனத்தை மயான அசம்பாவிதம்:

## காயமுற்ற அமைச்சர்கள் ஓய்வு எடுக்கின்றனராம்!

### தயான் சுகமடைந்து வருகிறார்!!

கொழும்பு, ஆக. 14

கடந்த திங்கட்கிழமை பொரளை கனத்தையில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்ற சமயம் ஏற்பட்ட அசம்பாவிதத்தின்போது காயமடைந்த ராஜாங்க அமைச்சர்களான ஏ. ஜே. ரணசிங்க, ஜோன் அமரதுங்க ஆகிய இருவரும் வீட்டில் ஓய்வு பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

இந்த சம்பவத்தில் காயமடைந்து தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பிரபல பத்திரிகை விமர்சகர் தயான் ஜெயதிலகா ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-த]

### புனாணை தாக்குதல் சம்பவம்:

## பாதிப்புற்ற குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்!

புனாணை, மயிலங்கேணி தமிழ்க் கிராமங்களில் இடம்பெற்ற தாக்குதல்களின் போது பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கும் நடவடிக்கையை அப்பகுதி அரசாங்க அதிபர் மேற்கொள்வார் என புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா தெரிவித்தார்.

மட்டக்களப்பு - பொலன்னறுவ இடைப்பட்ட எல்லைப் பகுதியில் கடந்த ஞாயிறு காலை ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று தாக்குதலை நடத்தியது. (த-எ)

# கண்டியில் தமிழரின் கடைகள் சூறையாடல்!

## பொருள்கள் தீக்கிரை!!

கண்டி நகரில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள திகனை என்ற இடத்தில் உள்ள தமிழருக்குச் சொந்தமான கடைகள் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் சூறையாடப்பட்டு, பொருள்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

திகனையில் வெற்றிலை பாக்குக் கடை ஒன்று பூட்டப்பட்டிருந்த வேளை, உடைக்கப்பட்டு அங்குள்ள பொருள்கள் சூறையாடப்பட்டதுடன், அவை அடித்து நொறுக்கப்பட்டதாகவும் —

அங்குள்ள டிஸ்பென்சரி ஒன்றுக்குள் நுழைந்த கோஷ்டி ஒன்று அங்கிருந்த பொருள்களை அள்ளி வெளியே போட்டு எரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அராலி கண்ணி வெடிச் சம்பவத்தில் மரணமான கேர்ணல் ஸ்டீபனின் மரணச் சடங்குகள் கண்டியில் மஹியாவ பொது மயானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. [த-3]

## தள்ளாடி ராணுவமுகாமிலும் விமான ஓடுபாதை நிர்மாணம்

மன்னார், ஆக. 14

மன்னார் மாவட்டத்தில் பிரதான இராணுவ முகாமாக விளங்கும் தள்ளாடி இராணுவ முகாமில் விமான ஓடுபாதை நிர்மாணிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்மலானைக்கும் நாட்டின் முக்கிய யா... தளங்களுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து சேவைகள், விரைவில் தள்ளாடி விமானத் தளத்துக்கு இடையிலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

தற்சமயம் கற்பிட்டியூடாக மன்னாருக்கு போக்குவரத்துச் செய்துவரும் படையினர் ... என்று தெரிவிக்கப்பட்டது;

## செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு 'குமாரி'க்கும்

### திங்களன்று பருத்தித்துறை வருகிறது

முன்னர் வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை கொண்டுவரப் பயன்படுத்தப்பட்டு, பின்னர் இடையில் நிறுத்தப்பட்ட 'குமாரி' கப்பல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருக்கும் 'குமண' கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கி வரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தற்போது 'குமாரி' கப்பலுக்கும் பாதுகாப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

அதனையடுத்து அந்தக் கப்பலுக்கு செஞ்சிலுவைச் சின்னம் பொறித்துசெஞ்சிலுவைக் கொடி பறக்கவிடும் வேலைகள் கொழும்பில் பூர்த்தியாகியுள்ளன என்றும் — தற்சமயம் அந்தக் கப்பலில் பொருள்கள் ஏற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது;


வடபகுதிக்கான சேவையில் மேலும் ஒரு கப்பலை சேவையில் ஈடுபடுத்துமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு அமைச்சிடம் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்தே 'குமாரி' கப்பலுக்கு தனது பாதுகாப்பை வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு இணக்கம் தெரிவித்தது; (இ-3)

### காயமடைந்தார்

காட்டுக்கு வேட்டைக்குச் சென்றவர் கட்டுத் துப்பாக்கி வெடித்ததால் காயமடைந்தார்.

பூநகரி முழங்காவிலில் கடந்த திங்கள் இடம்பெற்ற இச் சம்பவத்தில் முழங்காவிலைச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் (வயது 45) என்பவர் காயமடைந்தார். [த-15]

உ



### தொல்லை தவிர்த்தாள்வாய்!

வான்சுமந்த வானவர்கள் மமதையதற் கானாகி
ஊன்சுமந்த வாறதுபோ லுன்தமிழர் - கான்புகுந்து
நல்லைக் கதிர்வேலா! நலிகின்றார் போதுமினி
தொல்லை தவிர்த் தாள்வாய் தொடர்ந்து

— பொன். ஐயாத்துரை சிவகாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 தமிழரின் சடலங்கள் - - -

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தெரிந்ததே.

அந்தச் சம்பவங்களில் படு காயமடைந்த 10 பேர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும்—

இருவர் அவசர சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

மயிலந்தனையில் தமிழர் படுகொலையை முஸ்லிம் கொலைக் கும்பல் ஒன்றே புரிந்ததாக இராணுவத் தரப்பு கூறிவருவதை பொது மக்கள் மறுத்துக் கூறுகின்றனர்.

மயிலந்தனைக்கு அருகே உள்ள இராணுவ முகாம் ஒன்றில் இருந்து இராணுவத்தினர் சாதாரண உடையில் சென்று இப்படுகொலையைப் புரிந்தனர் என்று நேரில் பார்த்த மக்கள் நேற்று விசாரணை நடத்தச் சென்ற மட்டக்களப்பு நீதிபதியிடம் முறையிட்டனர். [ஓ-எ-5]

## நோயாளர்களு...

[2 ஆம் பக்க தொடர்ச்சி]
செல்லும்.

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக இம்மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் பதிவு செய்த நோயாளர்கள் இன்று காலை 7மணிக்கு முன் யாழ். ஆஸ்பத்திரிக்கு வருமாறு— பணிப்பாளர் கேட்டுள்ளார். [ஓ-3-15]

## நல்லூரில் இன்று

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் - 12 ஆம் திருவிழாவான - இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் (மாலையில்) - கனகாம்பரி பத்மநாதனின் இன்னிசைக்கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''அசுரர் தோற்றம்'' என்ற பொருளிலான கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில், பிற்பகல் 2.00 மணிக்கு - கந்த புராணப் படிப்பு, பிற்பகல் 3.00 மணிக்கு - மௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர்விரிவுரை. [ஓ-30-126]

# பெருமாள் குடும்பத்தை இடம் மாற்ற முயற்சி

## பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை

கொழும்பு, ஆக. 14

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாளும், அவரது குடும்பத்தினரும் மிகவும் பாதுகாப்பான மற்றும் ஓர் இடத்துக்கு மாற்றம் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

'த ஐலண்ட்' பத்திரிகை தனது புதுடில்லிச் செய்தியாளர் எஸ். வெங்கட்நாராயணனை மேற்கோள் காட்டி இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

திரு. பெருமாள் தற்போது மத்தியப்பிரதேச மாநிலம் — குணா மாவட்டத்தில் உள்ள சந்தேரி கோட்டையில் வசித்து வருகின்றார். அவர் வசிக்கும் கோட்டையைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான ஆயுதம் தரித்த பொலீஸார் கோட்டையை காவல் புரிந்து வருகின்றனர்.

திரு. பெருமாள் வசித்து வரும் இந்தக் கோட்டைபற்றி பத்திரிகைகளில் விபரங்கள் வெளியாகியுள்ளதன் காரணமாக, தொடர்ந்து கோட்டையில் அவர் வசிப்பது அவருக்கும், அவரது குடும்பத்துக்கும் பாதுகாப்பாக இராது என்று மாநில அரசு அதிகாரிகள் கருதுகின்றனர்.

திரு. பெருமாள் தான் பாதுகாப்பாக வசிக்கலாம் என்று கருதும் இடம் ஒன்றை இந்தியாவுக்குள்ளேயே கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் இந்திய அதிகாரிகள் தற்போது இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கிறது.

புதுடில்லி அரசின் செலவில் தமது பிள்ளைகள் மிகச் சிறந்த கல்வி வசதியைப் பெறக்கூடியதாகப் புதிய இடம் இருக்கவேண்டும் என்று திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார் என்று 'ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 14

அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியில் இன்று பிற்பகல் 12.30 மணிக்கு யாழ். சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக பிறவுண் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய ''ஏ'' அணி மோதுகின்றது.

நாளை மறுதினம் நடைபெறும் ஆட்டத்தில் அரியாலை மஞ்சள் அணியை எதிர்த்து பற்றீஷியன்ஸ் அணி மோதும்.

இந்த ஆட்டங்கள் அரியாலை மத்திய சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினர் இன்று வெள்ளிக்கிழமை நாவாந்துறையில் உள்ள சோளபுரம், கண்ணபுரம் ஆகிய இடங்களில் சுகாதார மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த உள்ளனர். [இ]

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி குருக்கள்

(உதய கதிர்காமம், பருத்தித்துறை)

குமாரசாமி குருக்கள் 12-8-92 இல் சிவபதமடைந்தார். இவர் பரமேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீதர சர்மா, சுந்தரேஸ்வர சர்மா, பத்மநாத சர்மா, சோமசுந்தர சர்மா, நாராயண சர்மா, குணபூசனியம்மா, பாலாம்பிகையம்மா, ஜெயலஷ்மியம்மா, சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், சுப்பிரமணியக் குருக்கள் - அமிர்தேஸ்வரியம்மாவின் மருமகனும், தாசகுருக்கள், கண்ணன், ரவி ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்

அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று (14-8-92) அவரது இல்லத்தில் காலை 10-00 மணியளவில் நடைபெற்று, தகனத்திற்காக பூதவுடல் பருத்தித்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!

ஸ்ரீதர சர்மா (மைத்துனர்)

''சரவணபவனம்''
பிராமண தெரு,
தும்பளை,
பருத்தித்துறை.

(4943)

## திருமதி சின்னத்தங்கம் இராமச்சந்திரா

திருமதி சின்னத்தங்கம் இராமச்சந்திரா 12-8-92 இல் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரா (O. A., Railways) அவர்களின் அன்பு மனைவியும், திரு. டாக்டர். பரராஜசேகரம் (W H O. Delhi), திரு. சுந்தரலிங்கம் (Interpol, France), திரு. பாலசுப்பிரமணியம் (Architect, London), காலஞ்சென்ற சண்முகலிங்கம், மற்றும் திருமதி பரமேஸ்வரி சேனாதிராஜா, திருமதி தனலக்ஸ்மி கணநாதலிங்கம், திருமதி புவனேஸ்வரி அருணாட்சலம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை மற்றும் செல்வி சௌந்தரம் கந்தப்பு, திருமதி இராசம்மா கனகசபை, திரு சந்திரசேகரம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் ரூபி பரராஜசேகரம், திருமதி யசோ சுந்தரலிங்கம், திருமதி பாபறா பாலசுப்பிரமணியம், திரு. சேனாதிராஜா (Retired Food & Price Control Inspector;), திரு. கணநாதலிங்கம் (Asst. Director of Customs, Colombo), திரு. அருணாட்சலம் (Deputy Lcgal Draughtsman Monetraat) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-8-92 இல் 34, Temple Lane, Colombo - 3 என்ற விலாசத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு வை. தனபாலசிங்கம்

11, நக்கா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[22153]

## சின்னத்துரை நடராஜா

(இளைப்பாறிய விவசாய ஆலோசகர்)

37ம் இலக்க மின்சார நிலைய வீதியைச் வசிப்பிடமாகக் கொண்டவரான திரு சி நடராஜா 08- 08- 92 அன்று சனிக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (ஜேர்மனி), உமாதேவி (சுவிஸ்), இந்திராதேவி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), உருத்திராதேவி (U. K), ஜெகனேந்திரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (கனடா), கிருபாவதி (பிரான்ஸ்), மலாவிழி (சுவிஸ்), அகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி, ஸ்ரீஸ்செல்வசுந்தராஜா, செல்வராஜ் (Darley Butler), மோகனராஜ், ரமா, வைத்தியநாதன், சத்தி, ஆகியோரின் மாமனாரும், கவிதா, பிரதீப், சஜ்ஜீவ், சமேதா, பிரேந்ரா, ஜெனராஜ், ஜெனனி, ஆரத்தி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின், ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

மனைவி, திருமதி நடராஜா, பிள்ளைகள்.

37, மின்சார நிலைய விதி,
யாழ்ப்பாணம்,

[22156]

## யாழ். குடா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அவர்களின் மறைவின் பின்னர் வடபகுதிக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவும் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவும் நிலவரத்தை மீளாய்வு செய்தனர் என்றும் —

அதனைத் தொடர்ந்து அத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொப்பேகடுவ...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது

இதற்கிடையில் தாண்டிக்குளம் தடை முகாமில் வைக்கப்பட்டுள்ள அனுதாபப் புத்தகத்தில் கையொப்பம் இடுமாறு பயணிகளைப் படையினர் வற்புறுத்துவதாகவும் கூறப்படுகிறது. [ஓ-3]

## மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
போன்ற கலைஞர்கள் இறந்த போது அரசு கொடுத்த கௌரவம் இந்தத் தளபதிகளின் இறுதிக் கிரியைகளின் போதும் வழங்கப்பட்டிருந்தால் மக்களின் கோபாவேசம் இவ்வளவுக்கு கிளர்ந்து எழுந்திருக்காது எனவும் ராஜபக்ஷ கூறினார்.

சாதாரண எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்கள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் நடத்தப்பட்டதையும் ராஜபக்ஷ கண்டித்துள்ளார். (ஓ-10)

## கலைஞர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படடதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தி. மு. க ஆட்சியில் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ததாகக் கூறப்படுவதும் விசாரணைக் கமிஷனால் விசாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-எ]

## இறப்பமடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணுவத்தினர் கைவிட்டுச் சென்றதை அடுத்து அப்பகுயில் குடியமர்த்தப்பட்டிருந்த 250 சிங்களவர்களும் தமது இருப்பிடங்களை விட்டு மகாகச்சைக்கொடிப் பகுதிக்குச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி இறப்பமடு முகாமில் இருந்து வீதித் தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்பதும் —

புலிகளின் அந்த அதிரடித் தாக்குதலில் 15 இராணுவத்தினர் பலியானதுடன் அவர்களின் 'பவள்' கவச வாகனம் ஒன்று [illegible] ரக ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன என்பதும் தெரிந்ததவையே. [ஓ-5]

## புலிகள் மீதான...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
யக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அதன் தலைமைச் செயலகம் மற்றும் லண்டன் அலுவலகம் ஆகியவற்றிடம் அண்மையில் தான் உத்தியோகபூர்வமாகக் கேட்கப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க—

சட்டவிரோதமான நடவடிக்கைகளைத் தடுக்கும் விசேட நீதிமன்றத்தில், விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயற்குழு, திரு. லோறன்ஸ் திலகரின் பெயரில் நேற்று முன்தினம் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

''புலிகளின் அடுத்துள்ள நண்பன்'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்ட திரு. கௌதம் எனபவர் திரு. திலகரின் சார்பில் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

திலகரின் மனுவை வழக்குக் கோட்டில் வைக்க நீதிபதி பி. என். நாஹ் ஏற்றுக்கொண்டு விசாரணையை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நீதிபதியின் முன் தமது பிரசன்னத்தைப் பதிவு செய்த திரு. கௌதம், இந்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைவரும் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் என்றும் ஆதலால் அவர்கள் முறையான எதிர்மனு தயாரிக்கக் கால அவகாசம் தரும் வண்ணம் விசாரணையைக் குறைந்தது 6 வார காலத்துக்கு ஒத்தி வைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

உலகமே இந்த வழக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று கூறிய கௌதம், நீதித்துறையின் நம்பகத் தன்மை சோதனைக்குள்ளாகி இருக்கிறது. — என்றும் கூறினார்.

விசாரணை செய்யாமல் எவரையும் குற்றவாளி என்று முடிவு செய்ய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

திரு. திலகர் தமது மனுவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய இந்திய அரசுக்கு சட்ட ரீதியாக அதிகாரம் இல்லை என்றும், அதனால் இந்திய அரசின் பிரகடனம் சட்ட விரோதமானது, சட்டப்படி செல்லாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மீது விதிக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் தடை செல்லாது என்பது மட்டுமல்ல அதை இந்தியாவினால் சட்ட ரீதியாகச் செயற்படுத்த முடியாது என்றும் —

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் உள்ள ஓர் அமைப்பு அல்ல என்றும் திலகரின் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராகத் தாம் ஒரு போதும் செயற்பட்டது இல்லை என்றும்—

இலங்கையில் ஒடுக்கப்படும் தமிழினத்தின் விடுதலைக்காகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் ஆயுதம் ஏந்தி இலங்கையில் போரிடுவதுமே தமது நடைமுறைக் குறிக்கோள் என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### போராட்டத்துக்கு அங்கீகாரம்

மேலும் - 1985 இல் நடந்த திம்புப் பேச்சுவார்த்தை மூலமும் — 1987 இந்திய - இலங்கைப் பேச்சுவார்த்தை மூலமும் இந்திய அரசு தங்களது ஆயுதப் போராட்டத்தை ஏற்கனவே அங்கீகரித்தது தெரிந்த விடயமே என்றும் திலகரின் மனுவில் கூறப்பட்டுள்ளது. தமது இயக்கத்தைப் போராளிகள் என்றே சர்வதேச சட்டமும் அங்கீகரித்துள்ளதை திலகர் தமது மனுவில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டபோது நீதிபதி நாஹ் திரு கௌதத்தைப் பார்த்து, பிரதிவாதியின் வழக்குரைஞர் என்ற அந்தஸ்து இல்லாமல், அடுத்துள்ள நண்பர் என்ற வகையில் சட்ட நடவடிக்கைகளில் பங்குகொள்ள முடியாது என்று அறிவுறுத்தினார். (அ-எ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-08-92 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org